**சுகாதார முறைமை பதிலளிப்பு - ஏஐஐபீ செயற்திட்டம் - 2023**

-----------------------------------------------------------------------------------------------------------------

சுகாதார முறைமை பதிலளிப்பு செயற்திட்டம் - ஏஐஐபீ இன் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2022 யூலை 18 ஆம் திகதிய எல்0081ஏ ஆம் இலக்க மற்றும் எல்0124ஏ ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளில் உள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சு என்பன நிறைவேற்றல் முகவர்களாக உள்ளதுடன் மறுசீரமைப்பின் பின்னர் சுகாதார அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்ட முகாமைத்துவ அலகு அமுல்படுத்தல் முகவராக உள்ளது. உயிர்காக்கும் மருந்துகள், தடுப்பூசிகள், அறுவை சிகிச்சை மற்றும் சிகிச்சை நுகரக்கூடிய பொருட்கள் மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஆய்வுகூட மறு முகவர்கள் உள்ளிட்ட முக்கியமான மருந்துகள் மற்றும் ஏனைய மருத்துவப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் கொள்வனவு செய்வதற்கும் ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். பெறுகை நடவடிக்கைகள் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் ஆகியவற்றிற்கான ஆலோசனை சேவைகள் மற்றும் தொழில்நுட்ப உதவி ஆகியவற்றிற்கு நிதியளிக்கப்படலாம். மறுசீரமைப்பு கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 35,000 மில்லியனுக்கு சமமான கொழும்பு நகர மறுசீரமைப்பு செயற்திட்டத்தில் இருந்து ஐ.அ.டொலர் 70 மில்லியன் மற்றும் தணிப்பு நடவடிக்கைகள் மூலம் மண்சரிவு பாதிப்பை குறைக்கும் செயற்திட்டத்தில் இருந்து ஐ.அ.டொலர் 30 மில்லியன் என ஐ.அ.டொலர் 100 மில்லியன் ஆக இருந்ததுடன் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. இந்த செயற்திட்டம் 2022 யூலை 18 இல் அதன் செயற்பாடுகளைத் தொடங்கியிருந்ததுடன் 2025 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2022 யூன் 30 ஆம் திகதிய டிஎம்எஸ்/7777/எச்எஸ்ஈபி/வீஓ/II ஆம் இலக்க கடிதம் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் அவசரகால பெறுகைகளை முகாமை செய்வதற்கு இரண்டு சிரேஷ்ட பெறுகை உத்தியோகத்தர்கள் மாத்திரமே அங்கீகரிக்கப்பட்டுள்ளனர், எனினும் அந்த சுற்றறிக்கைக்கு முரணாக மேலதிகமாக இரண்டு சிரேஷ்ட பெறுகை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு மீளாய்வாண்டின் செப்தெம்பர் முதல் திசெம்பர் வரை ரூபா 570,681 சம்பளம் மற்றும் கூலிகளாக செலுத்தப்பட்டுள்ளது. | பெருமளவிலான பெறுகை பொதிகளை கருத்தில் கொண்டு செயற்திட்டத்தில் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான பதவியணியினர் போதுமானதாக இருக்கவில்லை. மேலும் சுகாதார அமைச்சினால் செயற்திட்டத்திற்கு உள்நாட்டில் பெறுகை நடவடிக்கைகளுக்கு பதவியணியினரை வழங்க முடியவில்லை. | விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 5 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ திணைக்கள சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவு | செயற்திட்ட வழிநடாத்தல் குழு கூட்டம் குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டும், எனினும் குழு மீளாய்வாண்டில் ஒரு அமர்வை மாத்திரமே சந்தித்திருந்தது. | செயற்திட்ட வழிநடாத்தல் குழு கூட்டங்கள் அமைச்சால் முடிவு செய்யப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டது, மேலும் 2023 ஆம் ஆண்டு நிலவிய சூழ்நிலை காரணமாக இரண்டு செயற்திட்ட | விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வழிநடாத்தல் குழுக் கூட்டங்களை மாத்திரமே எங்களால் நடாத்த முடிந்தது. எனினும், சுகாதார அமைச்சு மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளின் பங்கேற்புடன் பல முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் மற்றும் மூன்று பணிக் கூட்டங்கள் 2023 ஆம் ஆண்டில் நடைபெற்றன. | |
| (இ) | நிதிப் பிரமாண இல. 835(2)(அ) | ஒரு கட்டிடத்தை வாடகைக்கு எடுக்கும் போது, நிதிப் பிரமாண விதிகளில் உள்ள ஏற்பாட்டின் நோக்கெல்லைக்குள் ஒரு நோக்கத்திற்காக கட்டிடம் தேவை என்று திணைக்களத் தலைவர் திருப்தி அடைந்து, அந்த நோக்கத்திற்காக பொருத்தமான அரசாங்க கட்டிடங்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். எனினும், ஒரு கட்டிடத்தை வாடகைக்கு எடுக்கும் போது, அமைச்சுக்கு சொந்தமான அலுவலக வளாகத்தில் இடம் உள்ளதா அல்லது தற்போது வாடகை அடிப்படையில் பெறப்பட்டதா என்பது பரிசீலிக்கப்படவில்லை. | இராஜாங்க அமைச்சின் வளாகத்தில் இருந்து இடத்திற்காக மருத்துவ இல்ல கட்டிடம் மற்றும் மேலதிக செயலாளரிடம் (மருந்துப்பொருள் உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குமுறை) இருந்து இடத்தை பெற்றுக்கொள்வதற்காக மேலதிக செயலாளருடன் (பெறுகை) செயற்திட்டம் கலந்துரையாடியிருந்தது. எனினும் எங்களின் கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை. | விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்க வேண்டும். |
| (ஈ) | நிதிப் பிரமாண இல. 835 (இ) | 2023 பெப்ரவரி 28 ஆம் திகதிய தொடர்புடைய இணையதளத்தில் பெறுகை அறிவிப்பு வெளியிடப்பட்டது, இறுதி குத்தகை பெறுமதி அரசாங்க விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் அமைந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது, எனினும் குத்தகை பெறுமதியைக் கருத்தில் கொள்ளும்போது அரசாங்க விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து எந்தவொரு மதிப்பீடும் பெறப்பட்டிருக்கவில்லை. பெறுகை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் | முதலாவது கேள்வி செயன்முறையில் வளாகத்திற்கான மதிப்பீட்டை நாங்கள் பெற்றுள்ளோம், மேலும் விலைமதிப்பீட்டுத் திணைக்களம் வழங்கிய மதிப்பீட்டின் குறைந்த மதிப்பின் காரணமாக நாங்கள் செயன்முறையை கைவிட வேண்டியிருந்தது. 2023 மார்ச் 02 இல் அமைச்சின் செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சந்தை விலைவிகிதங்கள் மதிப்பீட்டு | நிதிப் பிரமாணங்களுடன் இணங்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிதிப்பிரமாணங்கள் மீறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | விலைவிகிதங்களுடன் ஒப்பிடப்படாததால் சந்தை விலையில் கொள்வனவு செய்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நிர்வாகம்**

| இல. | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான இந்த 705 பெறுகைகளுக்காக ரூபா 48.25 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10.76 மில்லியன் பயன்படுத்தப்பட்டு தற்போது ரூபா 22.34 ஆக பதிவு செய்யப்பட்டது. | நிதியேற்பாடுகள் எஞ்சியுள்ளன | மருத்துவப் பொருட்களின் பெறுகை ஒரு சிக்கலான செயன்முறையாகும், மேலும் இது செயற்திட்டத்தின் பெறுகை பதவியணியினரை மாத்திரமே சார்ந்து இருக்காது. மேலும் குறைந்த செயலாற்றலுக்கான முக்கிய காரணங்கள் பின்வருமாறுள்ளன.<br>• பல விநியோக வளமூலங்களில் இருந்து பொருட்கள் பெறப்படுவதால், மருத்துவ வழங்கல் பிரிவால் மருத்துவ வழங்கல் தேவைப்பாடுகளில் அடிக்கடி மாற்றங்கள்.<br>• கேள்வி ஆவணங்களில் உள்ள கேள்விதாரர்களின் குறைபாடுகள் பெறுகை பொதிகள் இரத்து செய்யப்படுவதை விளைவிக்கின்றன.<br>• தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் அங்கீகாரங்களில் தாமதம்.<br>• தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களின் பதவி விலகல்.<br>• ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் அங்கீகாரத்தில் தாமதம். | வருடாந்த நிதியேற்பாட்டை பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | • செயற்திட்ட பதவியணியினரின் பதவி விலகல்<br><br>இவை செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டிற்குள் காணப்படவில்லை. | |
| (ஆ) | கேள்வி ஆவணங்களில் செயற்திட்ட அலுவலகத்திற்கு தேவையான பகுதி 2500 சதுர அடி என இனங்காணப்பட்ட போதிலும், இரண்டாவது கேள்விதாரரிடம் இருந்து அதிக தொகைக்கு 5000 சதுர அடி கொண்ட வளாகம் தெரிவு செய்யப்பட்டது. பௌதீக பரிசோதனையின் போது தரைத்தளம் முற்றாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதும், செயற்திட்டப் பதவியணியினரிற்கு மேல் தளம் போதுமானதாக இருப்பதும் அவதானிக்கப்பட்டது. மேற்படி தளத்தில் சுமார் 302 சதுர அடி கொண்ட ஒரு அறை பயன்பாடின்றி மூடப்பட்டது. | கேள்வி நிபந்தனை மீறப்படுதல் | பின்வருவனவற்றைக் கருத்தில் கொண்டு வளாகம் தெரிவுசெய்யப்பட்டது<br><br>• முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள், மாகாண பதவியணியினருடனான PIU கூட்டங்கள், ஏனைய பங்குதாரர்களுடனான கூட்டங்கள் மற்றும் HSEP & HSRP செயற்திட்டங்களின் கடன் வழங்கும் முகவர்களுடனான கூட்டங்களுக்கு வளாகத்தைப் பயன்படுத்துதல்.<br><br>• HSEP இன் சிவில் பணிகளுக்காக மேற்பார்வை ஆலோசனை நிறுவனத்தின் கொழும்பு அலுவலகத்தை மாற்றுதல் மற்றும் அதன் மூலம் நிறுவனங்களின் கொழும்பு அலுவலக வளாகத்திற்கு வாடகை செலுத்துவதற்கான செலவைக் குறைத்தல். | கேள்வி நிபந்தனையுடன் இணங்குதல் வேண்டும். |